**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை :- திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 20 ம் நாள்

**இடைநிலை மனு எண். 467/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 21/2020**

1. ரவி.
2. முருகேசன் ..... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

1. சடகோபராமானுஜம்
2. கண்ணன் (எ) துரைராஜ் ...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பாண்டி. தென்னவன், M.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 24.04.2024 ம் தேதியன்று இறந்த 1ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து (Restore) செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவில் 2ம் மனுதாரர், 1ம் மனுதாரரின் சகோதரர் ஆவார். மனுதாரர், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

வழக்கு தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 15.05.2023 ம் தேதியன்று இறந்துவிட்டதாக கடந்த 22.09.2023 ம் தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன 1ம் எதிர்மனுதாரர் சடகோப ராமானுஜத்திற்கு வாரிசுகள் சேர்ப்பதற்காக வாரிசு விவரம் சேர்ப்பதற்காக கடந்த 24.04.2024 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் வாரிசுகள் விவரம் கோரிய மனு தாக்கல் செய்யாததால் அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி இறந்த சடகோபராமானுஜத்தின் வாரிசுகள் விவரம் மனுதாரருக்கு தெரியாததால் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. எனவே கடந்த 24.04.2024 ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரரை பொருத்து அசல் வழக்கை தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. எனவே இம்மனுவினை அனுமதித்து கடந்த 24.04.2024 ம் தேதியன்று இறந்த 1ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து (Restore) செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

3) **2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும், நிலைநிற்க கூடியதல்ல. ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் காலதாமதம் ஏற்பட்டதற்கான உரிய விளக்கங்கள் மற்றும்

ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யாமல் தற்பொழுது வாரிசுதாரர்களை சேர்க்க கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. மனுதாரர்கள் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கிலும், வழக்கினை இழுத்தடித்து எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்திலும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

மேற்படி வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கில் வாரிசுகளை சேர்க்காமல் இருந்துவிட்டு காலம் கடந்து மனுதாரர்கள் இந்த மனு கொடுத்திருப்பது சட்டப்படி நிலை நிற்கதக்கதல்ல என்றும், வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் செயல்பட்டுவிட்டு இதுபோன்றதொரு மனு கொடுத்திருப்பது எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தையே காட்டுவதாக உள்ளது.

எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு நீதியின் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் எதிர்மனுதாரர்களுக்கு ஏதேனும் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கறைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளதால் எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர்களால் இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5. <u>தீர்வு</u> :-

1. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது வழக்கு சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தை 2ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ மற்றும் மூன்றாம் நபர்களோ யாதொரு அத்துமீறலோ, பிரவேசமோ, தடைதகராறுகளோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் கடந்த 22.09.2023ம் தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்து, இறந்த 1ம் எதிர்மனுதாரர் சடகோப ராமானுஜத்திற்கு வாரிசுகள் சேர்ப்பதற்காக வாரிசுகள் விவரம் சேர்ப்பதற்காக கடந்த 24.04.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டு, அன்றைய தேதியில் வாரிசுகள் விவரம் கோரிய மனு தாக்கல் செய்யாததால் அசல் வழக்கானது 1ம் எதிர்மனுதாரரை பொருத்து அசல் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மேற்படி கடந்த 24.04.2024ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரரை பொருத்து அசல் வழக்கை தள்ளுபடி செய்த உத்தரவை ரத்து செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், தற்பொழுது இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்நீதிமன்றம் கவனமாக கருத்தில் கொள்கிறது.

**5.** எனவே 1ம் எதிர்மனுதாரரை பொருத்து கடந்த 24.04.2024ம் தேதியன்று அசல் வழக்கை தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து உத்தரவிடுவதால்,

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மனுதாரர்கள் அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நீதியின் நலன் கருதி இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6. முடிவில்,** மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 10.01.2025 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 10.01.2025.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (04.01.2025) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

<u>**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**</u>

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

I.A.No.467/2024 Dated : 04.01.2025

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 20 ம் நாள்

**இடைநிலை மனு எண். 467/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 21/2020**

1. திரு.ரவி, வயது 52, த/பெ.அய்யாகண்ணு, வசிப்பிடம், நெ.151, ஒத்தை தெரு, மரவாக்காடு சித்தேரி, சேரன்குளம் அஞ்சல், மன்னார்குடி டி.மு. இலாக்கா, திருவாரூர் மாவட்டம்.

2. திரு.முருகேசன், வயது 49, த/பெ.அய்யாகண்ணு, வசிப்பிடம், நெ.151, ஒத்தை தெரு, மரவாக்காடு சித்தேரி, சேரன்குளம் அஞ்சல், மன்னார்குடி டி.மு. இலாக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர்//

1. திரு.சடகோபராமானுஜம், வயது 73, த/பெ.லேட்.சீனிவாச ஐயங்கார், இந்து, சிவமதம், வசிப்பிடம், III Floor, சீனிவாசா அவென்யூ, விஷ்வநாதன் தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை சிட்டி சிவில் கோர்ட்டிலாகா, சென்னை மாவட்டம்.

2. திரு.கண்ணன் (எ) துரைராஜ், வயது 43, த/பெ.பொன்னுசாமி, இந்து, சிவமதம், வசிப்பிடம், ஆற்றங்கரை தெரு, பரவாக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

...... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 24.04.2024 ம் தேதியன்று இறந்த 1ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து (Restore) செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 25.09.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 16.10.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பாண்டி. தென்னவன், M.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 10.01.2025 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 10.01.2025.

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 04-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 26 ம் நாள்

**இடைநிலை மனு எண். 467/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 21/2020**

1. திரு.ரவி, வயது 52, த/பெ.அய்யாகண்ணு, வசிப்பிடம், நெ.151, ஒத்தை தெரு, மரவாக்காடு சித்தேரி, சேரன்குளம் அஞ்சல், மன்னார்குடி டி.மு. இலாக்கா, திருவாரூர் மாவட்டம்.

2. திரு.முருகேசன், வயது 49, த/பெ.அய்யாகண்ணு, வசிப்பிடம், நெ.151, ஒத்தை தெரு, மரவாக்காடு சித்தேரி, சேரன்குளம் அஞ்சல், மன்னார்குடி டி.மு. இலாக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர் //

1. திரு.சடகோபராமானுஜம், வயது 73, த/பெ.லேட்.சீனிவாச ஐயங்கார், இந்து, சிவமதம், வசிப்பிடம், III Floor, சீனிவாசா அவென்யூ, விஷ்வநாதன் தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை சிட்டி சிவில் கோர்ட்டிலாகா, சென்னை மாவட்டம்.

2. திரு.கண்ணன் (எ) துரைராஜ், வயது 43, த/பெ.பொன்னுசாமி, இந்து, சிவமதம், வசிப்பிடம், ஆற்றங்கரை தெரு, பரவாக்கோட்டை கிராமம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

...... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 24.04.2024 ம் தேதியன்று இறந்த 1ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து (Restore) செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 151 சிபிசி-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 25.09.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 16.10.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பாண்டி. தென்னவன், M.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. செலவுத்தொகை செலுத்தப்பட்டது.

02. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2025 ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.